திருச்சிராப்பள்ளியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள நேற்று (17.9.2025) வருகைதந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பு.

சமூக நீதி நாளான பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 147 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கேரள மாநிலம் கோட்டையம் மாவட்டம், வைக்கம் தந்தை பெரியார் நினைவகத்தில் நேற்று (17.09.2025) கோட்டையம் மாவட்ட ஆட்சித் தலைவர் சேத்தன் குமார் மீனா பெரியாரின் திரு உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அருகில் கூடுதல் ஆட்சியர் ஸ்ரீஜித், கோயம்புத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆ.செந்தில் அண்ணா, வருவாய் கோட்டாட்சியர் தீபா கேபி, வைக்கம் நகராட்சி தலைவர் திருமதி.பிரீத்தா ராஜேஷ், வட்டாட்சியர் விபின் பாஸ்கரன், நகர்மன்ற உறுப்பினர் ராஜசேகரன் ஆகியோர் உள்ளனர்.

சமூக நீதி நாளான பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 147 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கேரள மாநிலம் கோட்டையம் மாவட்டம், வைக்கம் தந்தை பெரியார் நினைவகத்தில் நேற்று (17.09.2025) கோட்டையம் மாவட்ட ஆட்சித் தலைவர் சேத்தன் குமார் மீனா தந்தை பெரியாரின் திரு உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி நினைவகத்தினை பார்வையிட்டார். அருகில் கூடுதல் ஆட்சியர் ஸ்ரீஜித், கோயம்புத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆ.செந்தில் அண்ணா, வருவாய் கோட்டாட்சியர் தீபா கேபி, வைக்கம் நகராட்சி தலைவர் திருமதி. பிரீத்தா ராஜேஷ், வட்டாட்சியர் விபின் பாஸ்கரன், நகர்மன்ற உறுப்பினர் ராஜசேகரன் ஆகியோர் உள்ளனர்.

மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில்

அகஸ்தீஸ்வரம் பேரூரில் - அண்ணா பிறந்தநாள் உறுதிமொழி ஏற்பு!

கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்றார்!

குமரி, செப்.18- கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி "ஓரணியில் தமிழ்நாடு" இயக்கத்தில் இணைந்த குடும்பங்கள், பூத் கமிட்டியினர் கலந்து கொண்ட வாக்குச்சாவடி அளவிலான "தமிழ் நாட்டை தலைகுனிய விட மாட்டேன்"என்ற உறுதி மொழி முன்மொழிவு கூட்டம் 15.09.2025 அன்று காலை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், அகஸ்தீஸ்வரம் பேரூர், பூத் எண்: 248 ல் வைத்து நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி., கலந்து கொண்டு உறுதி மொழியை முன்மொழிந்தார்.

நிகழ்வில் பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், மாநில உணவு ஆணைய தலைவர் என். சுரேஷ்ராஜன், மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கன்னியாகுமரி தொகுதி பார்வையாளர் ரீதர் ரொட்ரிகோ, அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய செயலாளர் பா.பாபு, அகஸ்தீஸ்வரம் பேரூர் செயலாளர் டே.விஜய கங்காதரன் உட்பட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக உறுப்பினர்கள், பாக முகவர்கள் (BLA2), BLC, BDA, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை வழியாக இணைந்த புதிய கழக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி "ஓரணியில் தமிழ்நாடு" இயக்கத்தில் இணைந்த குடும்பங்கள், பூத் கமிட்டியினர் கலந்து கொண்ட வாக்குச்சாவடி அளவிலான "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்" என்ற உறுதிமொழி முன்மொழிவு கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் அகஸ்தீஸ்வரம் பேரூரில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., கலந்து கொண்டு உறுதிமொழியை முன்மொழிந்தார். நிகழ்வில் அமைச்சர் த.மனோ தங்கராஜ், என்.சுரேஷ்ராஜன், ஜெ.ஹெலன் டேவிட்சன், ஸ்ரீதர் ரொட்ரிகோ, பா.பாபு, டே.விஜய கங்காதரன் உட்பட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக உறுப்பினர்கள், பாக முகவர்கள் (BLA2), BLC, BDA, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை வழியாக இணைந்த புதிய கழக உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் பேரறிஞர் அண்ணாவின் 117வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் ஒன்றிய செயலாளர் எஸ்.சண்முகவடிவேல், பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன், துணைத் தலைவர் கான்முகமது, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

புதூர் ஊராட்சி ஒன்றியம், மாதலபுரம் ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு மின்வாரியத். துறை சார்பில் பெயர் மாற்றம், வேளாண்மை துறை சார்பில் விதைப்பை, கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், உள்ளிட்டவை வழங்கினார். நிகழ்வில் புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இமானுவேல், வடக்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பால்ராஜ் உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.